# கும்பகோணம் மண்டலம்
# திருவாரூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# புதுப்பத்தூர் -சத்திரக்கட்டளை கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை ........ 2
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் ........ 3
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் ........ 3
4. தொடக்க விழா அழைப்பிதழ் ........ 4
5. புதுப்பத்தூர் -சத்திரக்கட்டளை கிராமத்தின் தொடக்கவிழா ........ 5
6. மருத்துவ முகாம் ........ 7
7. மனநல ஆலோசனை முகாம் ........ 7
8. மரக்கன்று வழங்குதல் சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் ........ 7
9. சர்வதேச யோகா தினம் ........ 8
10. அனுபவ உரை ........ 8
11. நிறைவு விழா நிகழ்ச்சி நிரல் ........ 16
12. எதிர்காலத் திட்டங்கள்: ........ 17
13. வாழ்த்து: ........ 17

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information |
|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | புதுப்பத்தூர் -சத்திரக்கட்டளை |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | 22 .03.2022 |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | 23.08.2022 |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | 5 மாதங்கள் |
| 5. | மண்டலம் | கும்பகோணம் மண்டலம் |
| 6. | அறக்கட்டளை | திருவாரூர் |
| 7. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:116 பெண்:193 மொ:309 |
| 8. | பள்ளியின் பெயர் | ஊராட்சி ஒன்றிய துவாக்கபள்ளி |
| 9. | 14 வயதிற்கு கீழ் உடற்பயிற்சி பயின்றவர்கள் | ஆண்:74 பெண்:84 மொ:158 |
| 10. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:55 பெண்:196 மொ:251 |
| 11. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:55 பெண்:196 மொ:251 |
| 12. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:51 பெண்:173 மொ:224 |
| 13. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:31 பெண்:103 மொ:134 |
| 14. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:-25 பெண்:105 மொ:130 |
| 15. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:22 பெண் :103 மொ:125 |
| 16. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:19 பெண்:63 மொ:82 |
| 17. | அருள்நிதியார் பயிற்சி | ஆண்:0 பெண்:06 மொ:06 |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

*பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.*

*அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை* SKY *யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.*

*மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.***SKM.***மயிலானந்தன் அவர்களால்* 233-*வது கிராமமாக* ***புதுப்பத்தூர் - சத்திரக்கட்டளை*** *கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.*

*இக்கிராமத்தில்* 22-03-2022–*ஆம் தேதியிலிருந்து* 23.08.2022-*ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.*

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. தொடக்க விழா அழைப்பிதழ்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

### நிகழ்ச்சி நிரல்

மாலை

5.30 மணி : கொடியேற்றம் மற்றும் மரக்கன்றுகள் நடுதல்

5.45 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

6.00 மணி : வரவேற்புரை : அருள்நிதி. **V. பெரியசாமி** அவர்கள்,
தலைவர், WCSC-கும்பகோணம் மண்டலம்.

முன்னிலை வகிப்பவர்கள் :

திரு. **S.விஸ்வநாதன்** அவர்கள்,
(திட்ட நன்கொடையாளர்), சத்திரக்கட்டளை..

திரு. **P.கருணாகரன்** அவர்கள்,
திருவாரூர் மாவட்டக் குழு உறுப்பினர், ஓவளிக்குடி.

திரு. **N.நடராஜன்** அவர்கள்,
திருவாரூர் ஒன்றியக் குழு உறுப்பினர், புதுப்பத்தூர்.

பேரா.**G.பாலமுருகன்** அவர்கள், இணை இயக்குனர், WCSC-VSP.

மு.பேரா. **K.சரவணன்** அவர்கள்,
மண்டலச் செயலாளர், WCSC-கும்பகோணம் மண்டலம்.

அருள்நிதி. **S.முத்து** அவர்கள்,
மண்டல துணைத்தலைவர், WCSC-கும்பகோணம் மண்டலம்.
நிர்வாக அறங்காவலர், திருவாரூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை.

அருள்நிதி. **S.மாரிச்சாமி** அவர்கள், துணைத்தலைவர் (VSP),
திருவாரூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை.

6.05 மணி : விருந்தினரை கௌரவித்தல் மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல்

6.10 மணி : திட்ட அறிமுகவுரை : அருள்நிதி.**P.முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

6.20 மணி : வாழ்த்துரை : திரு. **ராஜசேகர்** அவர்கள்,
ஊராட்சி மன்றத் தலைவர், புதுப்பத்தூர் ஊராட்சி.

6.25 மணி : தலைமையுரை : அருள்நிதி. **R.பாஸ்கர்** M.Sc. (YHE) அவர்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலர், திருவாரூர் ஊராட்சி ஒன்றியம்.

6.30 மணி : தலைவரை பற்றிய அறிமுகம்

6.35 மணி : திட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை (காணொலி காட்சி) :
அருள்நிதி.**SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

## 5. புதுப்பத்தூர் -சத்திரக்கட்டளை கிராமத்தின் தொடக்கவிழா

***Asst.Prof. S.Selvaraj, Asst.Prof. S.Viswanathan, SKY Yoga Centre, Bahrain*** *நிதி உதவியுடன், கும்பகோணம் மண்டலம், திருவாரூர் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, 22.03.2022 ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்* ***புதுப்பதூர் -சத்திரக்கட்டளை*** *கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*















**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**











## 6. மருத்துவ முகாம்

27.05.2022 அன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 101 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





## 7. மனநல ஆலோசனை முகாம்

*10.07.2022 அன்று **A/N. Sivaraman** அவர்களால் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் மொத்தம் 65 அன்பர்கள் கலந்துகொண்டனர். மேலும் தனிநபர் ஆலோசனை 13 கிராம அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*





## 8. மரக்கன்று வழங்குதல் சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

21.06.2022 அன்று ***Prof.Muthu, Joint Director of VSP*** அவர்களால் *100* மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் மொத்தம் *96* அன்பர்கள் கலந்துகொண்டனர் மற்றும் பிரம்மஞானம் வகுப்பிற்கு புதுப்பதூர் -சத்திரக்கட்டளை கிராமத்திலிருந்து 82 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





## 9. சர்வதேச யோகா தினம்

*21.06.2022 அன்று புதுப்பதூர் -சத்திரக்கட்டளை கிராமத்தில் சர்வதேச யோகதினம் நடைபெற்றது. இதில் ஊர் பொதுமக்கள் 96 நபர்கள் கலந்து கொண்டனர்.*






## 10. அனுபவ உரை

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Village Name** | | **Pudhupatthur - Sathirakattalai** | | **Name of the Professors** | **Asst.Prof.T.Govindharajan** | **Date of Start** | **22-03-2022** | | **95.00 %** | **Maximum** | **No. of Responses** | **30** | |
| **Sponsor Name** | | **SKY Yoga Centre,Bahrain** | | | **Asst.Prof.G.Bhuvaneswari** | **Date of Closing** | **23-08-2022** | | **25.00 %** | **Minimum** | | | |
| **Sl No.** | **Feedback Questions** | **Average Performance** | **Anandhi G** | **M Anusya** | **S.Bhuvaneswari** | **B.mythili** | **M.Mallika** | **P Anusya** | **M Vibithra** | **T Gnanaprakasam** | **V Varadarajan** | **R Rajeswari** | |
| | | | **F** | **F** | **F** | **F** | **F** | **F** | **F** | **M** | **M** | **F** | |
| 1 | To what extent the physical exercises are helpful and effective to you? | 3.8 | 4 | 4 | 4 | 3 | 3 | 4 | 4 | 4 | 4 | 3 | |
| 2 | To what extent your physical health has improved due to physical exercises? | 2.37 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 3 | 3 | 2 | |
| 3 | How clean is your village now compared to before the village was adopted? | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | |
| 4 | Were you able to completely control your addiction to tobacco/ alcohol/ drug? | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | Are you good in studies? | | | | | | | | | | | |
| 6 | Are you able to remember things? | 2.57 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 |
| 7 | Are you able to focus on studies and other activities (School/College)? | | | | | | | | | | | |
| 8 | How much of control have you gained on your anger? | 3.13 | 3 | 3 | 4 | 4 | 4 | 3 | 3 | 3 | 4 | 4 |
| 9 | To what extent your Mental health has calmed due to SKY Meditation? | 3.5 | 4 | 4 | 3 | 4 | 3 | 3 | 4 | 3 | 4 | 3 |
| 10 | What are your levels of tolerance to accept others behavior and maintain cordial relationship? | 3.53 | 4 | 4 | 4 | 4 | 4 | 3 | 4 | 3 | 4 | 4 |
| 11 | To what extent are you able to adjust with your family and friends? | 3.3 | 4 | 4 | 4 | 4 | 2 | 3 | 4 | 3 | 4 | 3 |
| 12 | How much are you able to sacrifice to take the relationship forward? | 2.1 | 3 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| 13 | To what extent are you able to eradicate your worries to maintain a healthy life? | 2.97 | 4 | 3 | 2 | 4 | 3 | 4 | 4 | 2 | 2 | 2 |
| 14 | How much are you able to moralize your desires to be contented? | 3.23 | 3 | 4 | 4 | 4 | 3 | 3 | 3 | 3 | 3 | 4 |
| 15 | How satisfied are you with the change in your children's attitude? | 2.13 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 3 | 2 |
| 16 | How satisfied are you with the change in your children's focus towards education? | 2.2 | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | How satisfied are you with the tailoring skills developed? | | | | | | | | | | | |
| 18 | How satisfied are you with the earnings / income through tailoring? | | | | | | | | | | | |
| 19 | Health Improvements Resolved | | | | | | | Sugar Control | Sug ar Con trol | Mens trual probl ems/ PCO D | | | |

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 95% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 2 | Around 88 % of the participants accept others behaviour and maintain cordial relationship |
| 3 | Around 88% of the participants have their mental health calmed due to SKY meditation |
| 4 | Around 86% of the participants were able to remember things |
| 5 | Around 78% of participants are able to control their anger |
| 6 | 53% (165) of the participants have made progress in family peace |
| 7 | Due to SKY Exercises and mediation 41 participants are cured of sugar problem, 10 women participants are cured of Menstrual problems / PCOD, 10 participants are cured of Joint pain, Asthma / Breathing problems, Ulcer |
| 8 | 95% of the participants are happy with the VSP Programme |



S. ரேவதி செந்தில்நாதன்,
V.S.P சித்தரக்கூட்டணை,
அதுப்பத்தூர்.

எனது பெயர் ரேவதி வயது 35 நான் மனவளக் கலை யோகா பயிற்சி வருவதற்கு முன்னால் அதிகமாக கோபப்படுவேன். சில உடல் உபாதை-காரம் இருந்தன. அப்பொழுது தான் சங்கர் ஊருக்கு கிராமசேவை திட்டத்தின் மூலம் மனவளக் கலை யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

அத்திட்டத்தில் நானும் கலந்து கொண்டேன் அப்பயிற்சியில் உடற்பயிற்சி, காயகல்ப பயிற்சி, தவம் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன மேலும் அப்பயிற்சியில் அகத்தாய்வு வகுப்பும் நடத்தப்பட்டது. அந்த அகத்தாய்வு பயிற்சியில் "சினம் தவிர்த்தல்" "கவலை ஒழித்தல்" வகுப்பு நடந்தது. அதிலும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். அதன் பயனாக என்னிடம் இருந்த அதிகப்படியான கோபம் கட்டுக்குள் வந்தது.

இப்பொழுது என் குடும்பத்தில் மட்டுமின்றி அனைவரிடத்திலும் கோபப்படாமல் அன்போடு நடந்து கொள்கிறேன் உடல்சார்ந்த பிரச்சனைகளும் சரியாயின "வாழ்க வளமுடன்" என்ற மந்திர சொல் என் வாழ்க்கையை சந்தோஷமாக மாற்றியது.

நான் மனவளக்கலை யோகாவால் மனதளவிலும் உடல் அளவிலும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழக் கற்று கொண்டேன். என் வாழ்வில் காணக் கிடைக்காத சொர்க்க பூமியான மனவளக்கலையின் மணி மகுடம் குரு பீடம் அமைந்திருக்கும் ஆழியாறு அறிவு திருக்கோயிலுக்கு பிரம்ம ஞான பயிற்சிக்கு சென்று பயிற்சி பெற்றேன். இப்பயிற்சி மேலும் என் வாழ்க்கைக்கு வளம் பெற பயனுள்ளதாக இருந்தது.

குரு வாழ்க குருவே துணை!

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.



S. கலையரசி
VSP சத்திரக்கட்டளை

இந்த யோகா பயிற்சி எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. அனைத்து உடற்பயிற்சிகளும் உடலுக்கு புத்துணர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் கொடுத்தது. தியானப் பயிற்சிகள் மனதுக்கு அமைதியைக் கொடுத்தது. இதற்கு முன் நான் கால்வலியால் மிகவும் அவதிப்பட்டேன். தற்போது இப்பயிற்சியினை நான் தொடர்ந்து செய்து வருவதால் கால்வலி நன்கு குறைந்துள்ளது. தினமும் காலை, மாலை இருவேளையும் காயகல்ப பயிற்சி செய்து வருவதால் உடல் எப்போதும் சுறுசுறுப்பாகவும், புத்துணர்ச்சி ஆகவும் உள்ளது. இந்த உடற்பயிற்சி மற்றும் காயகல்ப பயிற்சியினை நானும் எங்கள் குடும்ப உறுப்பினர்களும் வாழ்நாள் முழுவதும் செய்து பயன் பெறுவோம். இப்பயிற்சியினை எங்களுக்கு மிக சிறந்த முறையில் கற்று கொடுத்த ஆசிரியர்கள் இருவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

வாழ்க வையகம்! வாழ்க வையகம்!

வாழ்க வளமுடன்! S. Kala

உ.

குரு வாழ்க

குருவே துணை.

வாழ்க வையகம்   வாழ்க வையகம்   வாழ்க வளமுடன்



சத்திரக்கட்டளை

VSP.

வணக்கம் ஐயா,

எனது பெயர் R. ராகுல் 26 வயது ஆகின்றது. நான் சத்திரக்கட்டளை கிராமத்தில் வசித்து வருகின்றேன். கடந்த 5 மாத காலமாக மனவளக்கலை யோகா மூலமாக கலந்து கொண்டு பயிற்சியில் ஈடுபட்டு நீண்ட காலமாக இருந்து வந்த கழுத்துவலி பிரச்சினை, தூக்கமின்மை, சோம்பேறித்தனம் இவையெல்லாம் இருந்து வந்தது. தற்பொழுது வாழ்வின் அர்த்தமும், வாழ்வின் புரிதலும் அர்த்தமுள்ளதாக நினைவில் கொண்டு வாழ்ந்து வருகின்றேன். இதனால் மனவளமும் உடல் நலமும் ஆரோக்கியமாக இருக்கின்றதை மனமகிழ்வோடும் முழு உணர்வோடும் சுறுசுறுப்புடனும் இருக்கின்றது தெரிவித்து கொள்கிறேன். இந்த வாய்ப்பினை அளித்த நண்பனை தந்த திரு. செல்வராஜ் ஐயா அவர்களுக்கும், கற்று கொடுத்த ஐயா. கோவிந்தராஜ், அம்மா புவனேஸ்வரி அவர்களுக்கும் மனமுவந்து நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இப்படிக்கு,

R.Ragh.

உ.

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.

சந்திரக்கட்டளை,
VSP.



வணக்கம் ஐயா,

எனது பெயர் S.புவனேஸ்வரி. எனது சகோதரி பெயர் S.ஈஸ்வரி அவர்களின் இளைய மகன் S.ரித்தீஸ்குமார் 8 வயது ஆகின்றது. கடந்த 6 மாத காலமாக புற்று நோயால் கடும் அவதிபட்டு வந்தான். இந்த சிறு வயதில் இப்படி ஒரு வியாதியை கண்டு பயந்து வந்த நிலையில் மனவளக்கலை மூலமாக அறிவு திருக்கோயில் இருந்து எனது மகனுக்கு அனைவரும் தினமும் அவனை வாழ்க வளமுடன் அனுதினமும் வாழ்த்தியதால் அவன் இன்று நல்லமுறையில் முழு பாதிப்பிலிருந்து விடுபட்டு நலமுடன் இருக்கின்றான். தற்பொழுது அவனும் தினமும் மூச்சுப்பயிற்சி, கைப்பயிற்சி, கால்பயிற்சி, சூரிய நமஸ்காரம் இதனை தினமும் காலையில் பயிற்சி செய்து வருகிறான். பள்ளிக்கும் செல்கிறான். இவனைப் போன்று யாருக்கும் இந்த வியாதி வரக்கூடாது என்றும் மனமுவந்து வாழ்த்துகிறேன். இந்த வாழ்த்தனை அளித்த ஐயா கோவிந்தராஜ், அம்மா புவனேஸ்வரி அவர்களுக்கும் இத்திட்டத்தினை அளித்த நன்கொடையாளர்களுக்கும், சந்திரக்கட்டளை சேவை மையத்துக்கும், சந்திரக்கட்டளை மக்களுக்கும் மனமார நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு,
S. புவனேஸ்வரி.

உ

குரு வாழ்க

குருவே துணை.

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



சத்திரக்கட்டளை VSP.

ஐயா வணக்கம்,

எனது பெயர் M.மல்லிகா நான் சத்திரக்கட்டளை கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 58 வயது ஆகின்றது. 40 வயதிலிருந்து எனக்கு சுகர், ப்ரஷர், இடுப்புவலி, முழங்கால் வலி இவையெல்லாம் இருந்தது ஒரு நாளைக்கு சுகர் ப்ரஷர்க்கு 5 மாத்திரைகள் உடம்பு வலிக்கு 2 மாத்திரை, மருந்துகள் எடுத்து வந்துள்ளேன். மாத்திரையிலேயே காலம் முழுவதும் போய்விடுமோ என்கிற பயமும் இருந்தது. நாங்கள் செய்த பாக்கியமோ என்னவோ திரு. செல்வராஜ் ஐயா மூலமாக எங்கள் ஊருக்கு மனவளக்கலை யோகா மையம் அமைய பெற்று தற்பொழுது ஒரு மாத்திரை கூட இல்லாமல் சுகர், ப்ரஷர், கோபம் கவலை மனதில் தோன்றிய பயமும் இல்லாமல், மாத்திரை, மருந்துகள், இல்லாமல், உடற்பயிற்சியினாலும், தவத்தினாலும் எனது உடம்பு ஆரோக்கியமாக இருக்கின்றதை மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறேன். இந்த பயிற்சியினை மன மகிழ்வோடு கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

இப்படிக்கு,

M.

## 11. நிறைவு விழா நிகழ்ச்சி நிரல்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

### நிகழ்ச்சி நிரல்

காலை

10.00 மணி: கொடியேற்றம், ஆரோக்கியமான அமைதி கிராமம் போர்டு திறப்பு.

10.15 மணி: இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

10.30 மணி: வரவேற்புரை :

அருள்நிதி. **S.முத்து** அவர்கள்,
தலைவர், WCSC-கும்பகோணம் மண்டலம்,
இணை இயக்குனர், கிராமிய சேவைத்திட்டம்-WCSC.

முன்னிலை வகிப்பவர்கள் :

து.பேரா. **S.செல்வராஜ்** அவர்கள், பஹ்ரைன்.

அ/செ. **S.விஸ்வநாதன்** அவர்கள், சத்திரக்கட்டளை.

திரு. **P.கருணாகரன்** அவர்கள்,
திருவாரூர் மாவட்டக் குழு உறுப்பினர்.

திரு. **N.நடராஜன்** அவர்கள்,
திருவாரூர் ஒன்றியக் குழு உறுப்பினர்.

பேரா. **G.பாலமுருகன்** அவர்கள், இணை இயக்குனர்,WCSC-VSP.

பேரா. **மா.சிவராமன்** அவர்கள்,
செயலாளர், WCSC-கும்பகோணம் மண்டலம்.

அருள்நிதி. **R.கைலாசம்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), WCSC-கும்பகோணம் மண்டலம்.

அருள்நிதி. **S.மாரிச்சாமி** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), திருவாரூர் ம.வ.க. மன்ற அறக்கட்டளை.

10.40 மணி: விருந்தினரைக் கௌரவித்தல்

10.45 மணி: செயல்பாட்டு உரை : அருள்நிதி. **P.முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

11.00 மணி : வாழ்த்துரை : திரு. **ராஜசேகர்** அவர்கள்,
ஊராட்சி மன்றத் தலைவர், புதுப்பத்தூர்.

11.10 மணி : தலைமையுரை : அருள்நிதி. **R.பாஸ்கர்** M.Sc., (YHE) அவர்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலர், திருவாரூர் ஒன்றியம்.

11.20 மணி: தலைவரைப் பற்றிய அறிமுகம்

11.25 மணி : திட்டத்தை நிறைவு செய்து சிறப்புரை (காணொலி காட்சி)

அருள்நிதி.**SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

## 12. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க **புதுப்பதூர் -சத்திரக்கட்டளை** கிராமம், திருவாரூர் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 13. வாழ்த்து:

**புதுப்பதூர்-சத்திரக்கட்டளை** கிராமத்தை அமைதிகிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாறுவதற்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய ***Asst.Prof. S.Selvaraj, Asst.Prof. S.Viswanathan, SKY Yoga Centre, Bahrain -க்கும்*** இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த கும்பகோணம் மண்டல பொறுப்பாளர்களுக்கும், திருவாரூர் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் ***து.பேரா.T.கோவிந்தராஜன் மற்றும் து.பேரா.G.புவனேஷ்வரி*** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை**
**உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.**
**உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே**
**உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.**

**-வேதாத்திரி மகரிஷி**

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்